<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 298/2009</u>**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் நாள் Dw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 10.09.2025

Dw2 (சந்திரசேகரன்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதி தரப்பில்)</u>**

எனது தாய் மற்றும் தகப்பனார் 2016 ம் ஆண்டு இறந்து விட்டனர் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். எனது முதல் விசாரணை பத்தி 7 ல் சதாசிவம் என்பவரிடம் ரூ.1,75,000/- ஐ 25.09.2000 த்தில் மருத்துவ செலவிற்காக கடனாக பெற்றுள்ளோம் என்று சொல்லியிருப்பது சரியானது தான். என் சகோதரர் சாந்தி பிரேம்குமார் வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் என் சகோதரர் சதாசிவம் கோரியபடி பூசப்பன் பெயரில் 26.09.2000 தேதியன்று பவர் பத்திரமும், சதாசிவம் பெயரில் 25.09.2000 அன்று ஒரு கிரய உடன்படிக்கை பத்திரமும் எழுதி கொடுத்து சார் பதிவாளர் அலுவலகத்தில் சதாசிவம் கோரியபடி பிரதிவாதிகள் கையொப்பம் செய்தார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் கையொப்பம் செய்தது உண்மை, ஆனால் கடனிற்காக தான் ஆவணங்கள் எழுதினோம். கிரய உடன்படிக்கை மற்றும் பொது அதிகார ஆவணத்தில் பிரதிவாதிகள் அனைவரும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 2 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதிகளுடையது என்றால் சரிதான். வாசாஆ 2 ல் இன்னார் என அடையாளம் காட்டியவர் என்ற இடத்தில் ஜெ ராஜேந்திரன், த பெ ஜோசப் என்பவர் கையொபப்பம் செய்துள்ளார் என்றால் சரி, அவர் எனது சகோதரியின் கணவர் என்றால் சரி. வாசாஆ 1 ல் மேற்படி ராஜேந்திரன் சாட்சியாகவும் இன்னார் என நிருபித்தவர் என்ற நிலையிலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். சதாசிவம் என்பவரிடம் கடன் பெற்றதற்கு வேறு ஆவணங்கள் எதுவும் எழுதிக் கொடுத்துள்ளோமா என்றால் கடனுறுதி சீட்டு, பச்சை தாள் மற்றும் வர்தமானம் ஆகியவற்றை பெற்றுள்ளதாக கூறுகிறார். அவ்வாறு கடன் பெற்றதற்கு வெற்று தாளில்

கையொப்பம் பெற்ற ஆவணங்கள் அடிப்படையில் சதாசிவம் எங்கள் மீது வழக்கு எதுவும் தொடர்ந்துள்ளாரா என்றால் இல்லை. 11.08.2003 அன்று வாசாஆ 1 மற்றும் 2ன் அடிப்படையில் சதாசிவம் மற்றும் பூசப்பன் வாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டு அன்று மாலை என் தாயாரிடம் ரூ.25000/- பாக்கி கிரயத் தொகை கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. நாளது தேதி வரை என் தாயாருடன் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் முன்பே இறந்த நிலையில் அவர் தாவா சொத்தை அனுபவிப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் 2ல் எனது தாயாரின் மருத்துவ செலவினங்களுக்காக பணம் வாங்கியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் தாயார் பக்க வாதத்தினால் பாதிக்கப்பட்டார் என்பதற்கு மருத்துவ ஆவணங்களோ சாட்சியங்களோ முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரிதான். பிசாஆ 1ல் 20.01.2003 அன்று என் தாயாருக்கு ரூ.25000/- ஓய்வூதிய கடன் அனுமதிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அந்த தொகை ரூ.25000/- சதாசிவத்திற்கு வங்கி மூலம் செலுத்தப்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் சரி. வாதியின் கணவர் தீரன் சின்னமலை பைனான்ஸ் நடத்தி வந்தார் என காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கிரயம் கொடுத்த பின் நிலத்தின் மதிப்பு உயர்ந்து விட்டதால் வாதியிடம் பணம் கூடுதலாக செலுத்த அவ்வப்போது மிரட்டியும் வற்புறுத்தியும் வந்ததால் வாதி ஈரோடு நீதிமன்றங்களில் 25.08.2008 ல் கேவியட் மனுக்கள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான், நாங்களும் கேவியட் மனுக்கள் தாக்கல் செய்தோம். வாதி கேவியட் மனுக்கள் தாக்கல் செய்ததால் வாதியின் மீது விரோம் கொண்டு வெள்ளோடு காவல் நிலையத்தில் 28.08.2008 ல் வாதி மீது ஒரு புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த புகாரை என் தகப்பனார் கொடுததார். அந்த புகாரில் ஈரோடு நீதிமன்றத்தில் வாதியின் மீது வழக்கு தொடர்ந்திருப்பதாகவும் அதனால் வாதி விரோதம் கொண்டு மாடுகளை பிடித்துச் சென்று விட்டதாகவும் கொடுத்துளளோம் என்றால் சரிதான். பிசாஆ 2 முதல் பிசாஆ 6 புகாரில் எந்த புகாரிலும் வாதியின் கணவரிடம் கடன் பெற்றதாகவும் அந்த கடனிற்காக கிரய ஆவணங்கள் மோசடியாக பெற்றுக் கொண்டதாக நாங்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 10.09.2008ல் வாதி எங்கள் பெயரில் வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு ஊரில் இல்லாத சதாசிவத்தின் மீது 14.09.2008 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த புகாரில் நாங்கள் பட்டியல் இனத்தவர், தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள், வயதான பெற்றோர்கள் மற்றும் எங்களை ஜாதி பெயர் கூறி திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்

என்று புகார் கொடுத்தோம் என்றால்சரிதான். வாதியின் கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது நீங்கலாக அவர் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டார் என்ற விவரங்களை பொய்யாக கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. 13.09.2008 ல் வாதியின் கணவர் வெளியூர் சென்றுள்ளார் என்பதை அறிந்து 14.09.2008 அன்று நானும் என் சகோதரர்கள் மூவரும் மற்றும் என் தகப்பனார் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குள் இருந்த வேலி கற்களை பிடுங்கி எறிந்தோம் என்றால் சரியல்ல. வேலையாட்களை அடித்தும் திட்டியும், விவசாய சாமான்களை எடுத்துச சென்று விட்டோம் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் ஊரில் இல்லை என்பதால் 17.09.2008 அன்று எங்கள் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் அடிப்படையில் 18.09.2008 அன்று வெள்ளோடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் 13.04.2010 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் தான் முதன் முறையாக கடனிற்காக கிரய பத்திரம் எழுதி பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சதாசிவத்திற்கு பவர் எழுதி கொடுத்ததாகவும், பூசப்பனுக்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பின்னிட்டு 11.09.2013 ல் என் தகப்பனார் திருத்தம் செய்யப்பட்ட எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. 2014 ம் ஆண்டு என் தகப்பனார் கூடுதல் எதிர்வழக்குரையில் வாதி முன்னிலைபடுத்தியுள்ள கிரயம் குறித்து விளம்புகை கோரியுள்ளோம என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ளபோது வாதியிடம் தொடர்ந்து பணம் கேட்டு தொந்தரவு செய்து வருவதாலும் அவர் பணம் கொடுக்கவில்லை என்பதாலும் பொய் புகார் கொடுத்து வந்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் 2022 ம் ஆண்டு வரை வாதியின் கணவர் மீது கொடுத்த அனைத்து புகார்களையும் வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விசாரித்தனரா என்றால் விசாரித்தனர். அந்த விசாரணைகள் முடிவுற்று விட்டது. விசாரணை மேற்கொண்டு சம்பவ தேதியில் வாதியின் கணவர் ஊரில் இல்லை என்பதாலும் புகாரில் உண்மை இல்லை என்பதாலும் அந்த புகார்கள் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன என்றால் சரியல்ல. வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் 22.09.2014 ல் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்திரவில் நானோ மற்றவர்களோ வாதியின் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து இடைஞ்சல் கொடுக்கக்கூடாது என உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்தரவுப்படி தாவா சொத்திற்குள் நாங்கள்

செல்ல அனுமதி இல்லை என்றால் சரியல்ல. வாதியின் பெயருக்கு தாவா சொத்திற்கு கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி முன்னிலைபடுத்தியுள்ள அடங்கல் கணக்கில் தென்னை, கரும்பு ஆகியவற்றை சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2008 வரை வாதி நில வரி செலுத்தி வந்துள்ளார் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை வாதி நிறுவிய கம்பி வேலி சிதைந்து அதே நிலையில் உள்ளது என்றும், தென்னை மரத்திற்கு நீர் பாய்ச்சி தென்னை மரத்தில் வரும் விளைபொருட்களை அவர் தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டு புகார் கொடுத்த பின் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் அடிப்படையில் வழக்கு நிலுவையில் இருப்பதால் வரி மற்றும் கந்தாயம் வாதிக்கு கொடுக்கக்கூடாது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் தற்போது வரை சுவாதீனத்தில் இருந்து வருவதால் அவர் கோரிவாறு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும் நாங்கள் கோரியுள்ள எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.10 17:48:36 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS